கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 411/2019**

திரு. பழனிசாமி (P.W–2) **3.12.2024.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4, 9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரங்கள் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எந்த புல எண்ணில் வருகிறது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் யார் எவ்வளவு விஸ்தீரனத்தில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி.. தாவா சொத்துக்கள் சுப்பையா கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. அவர் பெயரில் உள்ள ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்றால் சரி. பழனி கவுண்டர் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்களையும் நான் பார்த்ததில்லை என்றால் சரி. கணபதி கவுண்டர் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்களையும் பார்த்ததில்லை என்றால் சரி. கணபதி கவுண்டர் செய்து வைத்த ஆவணங்களையும் நான் பார்த்ததில்லை என்றால் சரி. ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்பதால் உயில் சாசனத்தில் நான் கையொப்பம் செய்ததாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல.

2. சாட்சி சான்ற ஆவணம் –1 முதல் விசாரணையில் நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் கணபதி கவுண்டர் ஏற்படுத்தவில்லை நான் கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் கணபதி கவுண்டர் பெயரில் உள்ள ஆவண விபரங்கள் எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல. சொத்து உயில் சொத்துக்களை பொறுத்து உயில் ஏற்படுத்திய நபருக்கு முழு அதிகாரமோ உரிமையோ இல்லை என்றால் தெரியாது. ராமாத்தாளுக்கும் லட்சுமிக்கும் உயில் ஏற்படுத்தியதாக சொல்லும் சொத்தில்

பங்கு உரிமை உள்ளது என்றால் தெரியாது. வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.12.03 16:55:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.